முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 864

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.02.2022, புதன்கிழமை

1. பிரணவக்குடில் படைத்த அரங்கா வாழ்க
   பிரம்மஞான சக்தி கொண்ட தேசிகா வாழ்க
   சரவணச் சுடரேற்றி கலியுகத்தில்
   சகலருக்கும் சன்மார்க்கம் அருளுகின்ற
2. அருளுகின்ற அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (பிலவ வருடம் தை மாதம் 27ம் நாள், 09.02.2022 புதன்கிழமை)
   வரமென உன்வழி மக்கள் கூட்டம்
   வள்ளலாக மாறி இந்த கலியுகத்தில்
3. கலியுகத்தில் அற்புதத்தை நடத்த இருக்க
   கந்தவேலன் யானும் மகிழ்ந்து அண்ணவர்கட்கு
   சிந்தைதனில் சூட்சும சக்தியாகப் பரவி
   சித்திகளும் அருளி உலகோரை காப்பேன்
4. காப்புதந்து உன்னோடு தர்மத்தை தொடர்ந்து செய்யும்
   கலியுக மக்கள் அனைத்துபேருக்கும்
   ஒப்புதலாகி அவர்களுக்கு உயர்ஞானம் தருவதோடு
   உலகை வெல்ல அழியாமையும் தந்து காத்தருள்வேன்
5. அருளவே அரங்கன் அவதார சூட்சுமத்தை
   அறிந்த மக்களெல்லாம் இனி உலகில்
   பொருள்வளமோடு புண்ணியபலம் பெருகி
   புகலுவேன் அரங்கன் வழி ஞானியாகும் வாய்ப்பு கண்டு சிறப்பர்
6. சிறக்கவே சிந்தை தெளிவுக்கும் சித்திக்கும்
   சூட்சும சக்தியாக அரங்கனுக்கு யான்
   நித்தம் நித்தம் சக்தி ஊட்டி வருதலுற
   நிலமதனில் அரங்கன் கரம்பட தீட்சை பெற்ற மக்களெல்லாம்
8. மக்களெல்லாம் இந்த கலியுகத்தில்
   மகான்களாகி உலகமாற்றம் செய்வது உறுதி உறுதி
   ஆக்கமுடன் ஆசி தந்து சுப்ரமணியர் யானும்
   அரங்கன் வழி உலகோர்க்கு வழிகாட்டுவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—